களுக்குத் தெரியும். எடுத்துக் காட்டாகத்தான், அரசின் சார்பிலே இன்றைக்கு 3,954.92 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டு, உப்பு உற்பத்தி செய்ய தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறோம். அது விரிவடையும்போது அருகாமையில் இருப்பதையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக எடுக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவரவர்களே, உப்பளங்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் நகரங்களிலேயிருந்து வெகு தூரங்களுக்குச் சென்று பணியாற்றும் அவல நிலைமை இருப்பதை அரசு அறியுமா? அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றும் பகுதிக்கு அருகிலேயே குடியிருக்கும் வகையில், அந்தப் பகுதிகளிலேயே நிலங்களை வாங்கி அளித்திட, முதலாளிகளிடத்திலே அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அவல நிலை எந்தக் காலத்திலேயிருந்து இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்பது எனக்குத் தெரியாது. அது இன்றைக்கு ஏற்பட்ட அவல நிலை அல்ல. அதைப் பற்றி அரசு கவனித்து ஆவன செய்யும்.

[முற்பகல் 9.10]

Kalugumalai as Pilgrim Centre

* Q. No. 25 — Thiru S. GANESAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(a) whether any representations, requesting the Government to notify Kalugumalai in Tirunelveli district as a Pilgrim Centre has been received ; and

(b) if so, the action taken there on ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) கழுகுமலை இப்பொழுது யாத்திரீகர்கள் தலமாகத்தான் பயன்படுத்தப்படுகிறது.

திரு. ரா. கு. பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தெய்வம் என்று கருதப்படுகின்ற முருகனுக்கு ஆறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கின்ற கழுகுமலை (குறுக்கீடு) யாத்திரீகர்கள் ஸ்தலமாகத்தான் இருக்கிறது. இருந்த போதிலும் அரசு அதை விரிவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சுற்றுலா மையமாக அறிவிக்கின்ற எண்ணம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அதைச் சுற்றுலா மையமாக ஆக்க முடியுமா என்பதைப்பற்றி சுற்றுலா துறையிடத்திலே பரிந்துரை செய்யும்படி அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. விவரம் கிடைத்த பிறகு விரிவாக பதில் அளிக்கலாம்.

Cardamom Resarch Centre

* Q. No. 26 — Thiru C. MANICKAM: Will the Hon. the Minister for Informatian and Religious Endowments be pleased to state—

(a) whether the Government are aware of the proposal of the cardamom Board, to open a Research Centre in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் சரகத்திலுள்ள தாண்டிக்குடியைச் சார்ந்த சங்கரிகானலில் குத்தகை எண். 15-ல் உள்ள நிலத்தில் ஓர் ஆராய்ச்சி மையம் நிறுவ வேண்டி 30 ஹெக்டர் பரப்பு காட்டுநிலத்தை குத்தகைக்கு ஏலக்காய் மத்திய சர்க்கார் வாரியம் கோரியது. மதுரை வடக்கு கோட்டத்தில் பாம்புக்கல்லார் ஒதுக்குக் காடுகளிலுள்ள குத்தகை எண். 15-ல், 25 ஹெக்டேர் காட்டு நிலங்களை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வருடம் ஒன்றிற்கு ஹெக்டேருக்கு ரூ. 250 வீதம் குத்தகை வசூலித்து ஏலக்காய் வாரியத்திற்கு கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஒ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, ஏலக்காய் வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிப்பதில் மிக அதிகமான வருவாய் அளிக்கும் அவசியமான பொருளாக இருப்பதனால் தமிழ் நாட்டில் இன்னும் அதிக அளவிலே உற்பத்தி செய்வதற்கும் காடுகளை அழிக்காமல் இருப்பதற்கும் நம் மாநில சர்க்கார் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, ஏலக்காய் பயிரிடுவதற்கு அடர்த்தியான காடுகளும், உயர்ந்த மரங்களும் தேவைப்படுகின்றன. ஆகவே, அதை ஒட்டியும் காடுகள் பாதுகாக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், ஏலக்காயினுடைய உற்பத்திக்கு அரசு ஊக்கம் அளிக்கும் முயற்சியை மேற் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.